# 60

# கதையின் எஞ்சிய பகுதி

## லூக். 15:25-32, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*வானொலி விளக்கவுரையாளரான பவுல் ஹார்வீ என்பவர், "கதையின் எஞ்சிய பகுதியைக்" கூறுபவரென்று அறியப்பட்டுள்ளார். காணாமற் போன ஆடு, காசு மற்றும் மகன் ஆகியோரைப் பற்றி இயேசு கூறிய பின்பு அவர் [இயேசு] "கதையின் எஞ்சிய பகுதியை" கொடுத்தார் - இது, வீட்டிலேயே தங்கியிருந்த மூத்த சகோதரன் ஒருவனைப் பற்றியதாகும் (லூக். 15:25-32). திருவாளர் ஹார்வீயால் கூறப்படும் "கதையின் எஞ்சிய பகுதி" என்பது பொதுவாக மேம்படுத்துவதாக இருக்கும், ஆனால் ஊதாரி மகன் பற்றிய "கதையின் எஞ்சிய பகுதி" என்பது தீர்மானமான கவலைக்குரியதாக உள்ளது. எடுத்துரைப்பின் இப்பகுதியானது, இயேசுவைப் பாவிகளுக்கு நண்பராயிருக்கிறார் என்று விமர்சித்திருந்த பரிசேயர்களைக் குற்றப்படுத்துவதற்காகப் பேசப்பட்டதாக இருந்தது (லூக். 15:1-3).*

*லூக்கா 15ல் உள்ள "கதையின் எஞ்சிய பகுதி"யானது, நான் இரு சகோதரர்களில் மூத்தவனாக இருப்பதால் என்னைப் பதற்றம் அடையச் செய்கிறது. பழைய ஏற்பாட்டின் கீழ், மூத்தமகன் இளையமகனைக் காட்டிலும் இருமடங்கு சொத்துக்களைச் சுதந்தரித்தான் (உபா. 21:17); இதைத் தவிர, மூத்தவனாக இருப்பதில் அனுகூலம் எதுவும் இருந்ததில்லை. மூத்தவனிடமிருந்து அடிக்கடி அதிகம் எதிர்பார்க்கப்பட்டது, மற்றும் அந்த எதிர்பார்ப்புகளின்படி வாழ்தல் என்பது கடினமானதாக உள்ளது.[1] நேர்மையாகக் கூறுவதென்றால், வேதாகமத்தில் உள்ள மூத்த சகோதரர் களில் பெரும்பான்மையானவர்கள் மிகவும் நேர்த்தியானவர்களாக இருந்த தில்லை;[2] மூத்த சகோதரனாயிருந்த காயீன் தனது இளைய சகோதரனை கொன்றான் (ஆதி. 4). மூத்த சகோதரனாயிருந்த ஏசா மதிப்பீடுகள் பற்றிக் கருத்துணர்வு அற்றவனாக இருந்தான் (ஆதி. 25:29-34). தாவீதின் மூத்த சகோதரர்களில் ஒருவன் அவருக்குக் கடினமான வேளையைக் கொடுத்தான் (1 சாமு. 17:28).*

*மிகவும் முக்கியமாக, லூக்கா 15ல் "கதையின் எஞ்சிய பகுதியாக" இருப்பது, மூத்த சகோதரன் பற்றிய இயேசுவின் சித்தரிப்பில் என்னையே நான் காண்பதால் என்னைப் பதட்டம் அடையச் செய்கிறது. வசனங்கள் 25 முதல் 30வரை உள்ள பகுதியானது என்னைத் தீவிரமாக சுயபரிசோதனை*

*செய்யும்படிக்கு வற்புறுத்துகிறது. ஒருவேளை இவைகள் உங்களுக்கும் அதையே செய்யலாம்.*

## *மனையை விட்டுச் செல்லாமலேயே "புறம்பே செல்லுதல்" சாத்தியமானதாக இருக்கிறது (வ. 25-30)*

*மூத்த சகோதரன் சில நல்ல பண்புகளைக் கொண்டிருந்தான்: இவன் ஒரு கலகக்காரனாக இருந்ததில்லை: இவன் இல்லத்தை விட்டு வெளியேற வில்லை, மற்றும் இவனது பெற்றோர்கள், இவன் இரவில் எங்கேயிருந்தான் என்பது பற்றிக் கவலைப்படத் தேவையில்லாதிருந்தது. இவன் சோம்பேறி யாக இருந்ததில்லை: இவன் பல ஆண்டுகளாகத் தனது தந்தைக்கு உண்மையுடன் ஊழியம் செய்து வந்தான் (வ. 29), மற்றும் இவனது சகோதரன் இல்லத்திற்கு வந்தபோது, இவன் "வயலில் இருந்தான்" (வ. 25; ஆதி. 3:19ஐக் காணவும்). இவன் ஒழுக்கமற்றவனாக இருந்ததில்லை: இவன் மாம்சப்பிரகாரமான பாவத்திற்கு எதிரானவனாக இருந்தான் என்பது உறுதி (வ. 30), எனவே இவன் ஒரு சுத்தமான, ஒழுக்கமான வாழ்வை வாழ்ந்திருக்க லாம். இருந்தபோதிலும் இவன், வீட்டை விட்டுச் செல்லாமலேயே தனது சொந்தமான பாவமாகிய "தூரதேசத்துக்கு" சென்றிருந்தான்.[3]*

*(1) இவன் சுய-நீதியுள்ளவனாக இருந்தான்: "நான் ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும்" (வ. 29). சிலவேளைகளில் நாம், பிறமக்கள் கொண்டுள்ள வெளிப்படையாகச் செய்யப்படுகிற பாவங் களைச் செய்திராமல் இருப்பதால் அவர்களைக் காட்டிலும் நாம் சிறந்தவர் கள் என்று நினைத்துக் கொள்ளுகின்றோம். மாம்சத்தின் பாவங்களைப் போலவே இருதயத்தின் பாவங்களும் ஆத்துமாக்களை விரைவிலேயே பேரழிவுக்கு உள்ளாக்குகிறது.*

*(2) இவன் தீர்ப்பிடுகிறவனாக இருந்தான்: "வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் ..." (வ. 30). ஒருவேளை இந்தக் குற்றச்சாட்டு உண்மையானதாக இருக்கலாம் அல்லது உண்மையற்றதாக இருக்கலாம். சிலவேளைகளில் நாம், வாய்ப்புக் கிடைத்திருந்தால் நாம் எவற்றில் குற்றப்பட்டிருப்போமோ, அவற்றைப் பிறர் செய்துள்ளதாக யூகித்துக் கொள்ளுகின்றோம்.*

*(3) இவன் மன்னிக்காதவனாக இருந்தான் (வ. 28-30).*

*(4) இவன் சுயத்தை மையங்கொண்டவனாக, பிறரைப் பற்றிக் கரிசனையற்றவனாக இருந்தான் (வ. 29, 30). பரிசேயர்களைப் போலவே இவனும் இழந்துபோகப்பட்டவர்களைப் பற்றி அக்கறையற்றவனாக இருந்தான்.*

*(5) இவன் கோபமுள்ளவனாக இருந்தான்[4] (வ. 28).*

*(6) இவன் தனது தந்தையிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டு, அவர் ஒருதலைப்பட்சமாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டினான்: "... நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை, ...*

*கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே" (வ. 29, 30).*

*(7) இவன் நன்றிகெட்டவனாகவும் முறையிடுபவனாகவும் இருந்தான் (வ. 29, 30). இவன் தான் கொண்டிருந்தவற்றை மதிக்கவில்லை.*

*(8) இவன் கடுமையானவனாக இருந்தான். இவன் தனது சகோதரனை சகோதரனாக உணர்ந்தறியவில்லை ("உம்முடைய குமாரனாகிய இவன்" [வ. 30]). இவனது சகோதரன் வீட்டை விட்டுச் சென்றபோது, இவன் அநேகமாக, "மோசமான குப்பை தொலைந்து ஒழிந்தது நல்லது" என்று நினைத்திருக்கலாம்.*[5]

*(9) இவன் விரோத மனப்பான்மை உடையவனாயிருந்தான்.*

*(10) இவன் மகிழ்ச்சியைக் கொல்லுபவனாக இருந்தான். இவன் தனது தந்தையின் மகிழ்ச்சியை நெகிழ்விக்க முயற்சி செய்தான் (நீதி. 17:22ஐக் காணவும்).*

*(11) இவன் இடைஞ்சல் ஏற்படுத்துபவனாக இருந்தான். இவன் வீட்டாரின் அகமகிழ்வின் இசைவைச் சீர்குலைத்தான்.*

*(12) இவன் இருளுள்ள பக்கத்தைக் காண்பவனாக இருந்தான். இவனுடைய சிந்தனைகள் யாவும் எதிர்மறையாயிருந்தன.*

*மூத்த சகோதரன் எண்ணப்போக்குப் பிரச்சனை கொண்டிருந்தான். மோசமான எண்ணப்போக்கானது நியாயத்தீர்ப்பை நிலைபிறழச் செய்துவிடும். இந்த மனிதன் தனது சகோதரன் திரும்பி வந்தது பற்றி செய்த பதில்செயலானது, "இவன் வீட்டில் தங்கியிருந்தது ஏன்? இவன் உண்மையுள்ளவனாக இருந்தது ஏன்?'' என்று நாம் கேட்கும்படி செய்கிறது, வெகுமதிக்காகவே இவன் இருந்தான் என்பது தெளிவாகிறது. நன்மை செய்வதற்கான இவனது எண்ணப்போக்கு தவறானது என்பது உறுதி.*

*மூத்தசகோதரனின் இருளான பக்கமானது, இவனது சகோதரன் திரும்பி வராத வரைக்கும் ஒருக்காலும் மேலே வந்திருக்காது. சிலவேளைகளில் நம்மில் உள்ள மோசமான பகுதியை வெளிக்கொண்டு வரும்படி சூழ்நிலைகள் எழுகின்றன, நாம் சிறுமைப் படுத்தப்படுகின்றோம்.*

## உங்கள் அகந்தையை விட்டுவிடாமல் "திரும்பி வருவது" சாத்தியமானதாக இருப்பதில்லை (வ. 31, 32)

*ஊதாரி திரும்பி வந்தது பற்றித் தந்தை கிருபையுள்ளவராய் இருந்தார்; இப்போது அவர் தமது மூத்த மகனிடம் கிருபையுள்ளவராய் இருந்தார். நான் ஒருவேளை கடுமையானவனாக இருந்திருப்பேன்: ''நன்றிகெட்டவனே! சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்வதை நிறுத்து! [மற்றவர்களை] மனந்தளர்த்துவதை விட்டு, வீட்டிற்குள் போ!" இதற்குப் பதிலாகத் தந்தை இவனிடத்தில் பொறுமையுடன் பேசினார். அவர் இன்னொரு மகனை இழக்க விரும்பாதிருந்தார். தந்தையின் வார்த்தைகள் சுருக்கமானவைகளாக இருந்தன, ஆனால் அவைகள், நாம் இந்த மூத்த மகனின் நோய்க் குறிகளைக் கொண்டிருந்தால், நம்மை விட்டு அவற்றை*

அகற்றிப் போடுவதற்கு நாம் ஏற்படுத்த வேண்டிய அவசியமான மாற்றங்களைத் தொகுத்துரைக்கின்றன:[6]

(1) உங்களுக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை எண்ணிப்பாருங்கள் (வ. 31): தேவனுடைய பிரசன்னமும் ("நீ எப்போதும் என்னோடிருக்கிறாய்") தேவனிடத்திலிருந்து பல வெகுமதிகளும் ("எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது").

(2) உங்கள் உறவுரிமையை ஒப்புக்கொள்ளுங்கள்[7] (வ. 32; "உம்முடைய குமாரனாகிய இவன்" (வ. 30) vs. "உன்னுடைய சகோதரனாகிய இவன்" [வ. 32].

(3) உங்கள் ஈவிரக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். தந்தை, "நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்" என்று கூறினார் (வ. 32). மூலவேத வசனத்தில் "இது அவசியம்" என்றுள்ளது.

மூத்த சகோதரன் சரியான எண்ணப்போக்கைக் கொண்டிருந்தால், இவன் உணவு மேஜையில் அமர்ந்து, இசையை மகிழ்வுடன் அனுபவித்து இளம் காளையின் இறைச்சியை உண்டிருக்கக் கூடும். இதற்குப் பதிலாக, இவன் இருளில் பிணங்கிக் கொண்டிருந்தான். இவன் ஆவியின் கனியைக் கொண்டிருக்கவில்லை (கலா. 5:22, 23). நமது இருதயத்தில் அந்தக் "கனியை" கொண்டிருத்தல் என்பது நமது உறவுமுறைப் பிரச்சனைகளில் பெரும்பான்மையானவற்றைத் தீர்த்துவிடும்.

## முடிவுரை

மூத்த சகோதரனுக்கு என்னவாயிற்று? இவன் தனது தந்தை கூறியதைக் கவனித்து, கொண்டாட்டத்தில் சேர்ந்துகொள்ளும்படி உள்ளே வந்தானா? இயேசு இதைக் கூறவில்லை. நீங்கள் ஆவிக்குரிய வகையில் ஒரு "மூத்த சகோதரராக" இருந்தால் மாற்றம் அடைவது மிகவும் கடினமானதாக உள்ளது. பரிசேயர்களைக் குற்றம் உணர்த்துதல் என்பதே கிறிஸ்துவின் நோக்கமாக இருந்தது, மற்றும் பெரும்பான்மையான பரிசேயர்கள் மாறாது இருந்தார்கள். இருப்பினும், அவர்களில் ஒரு சிலர் மாற்றம் அடைந்தனர் (அப். 15:5; 23:6; 26:5; பிலி. 3:5) - எனவே ஒரு நம்பிக்கை உள்ளது!

## குறிப்புகள்

இந்த சுருக்கமான படிப்பு ஒரு முழுப் பிரசங்கமாக விரிவாக்கப்பட முடியும். இந்தப் பிரசங்கத்தை நீங்கள், "மூத்த சகோதரன்" என்று அழைக்க முடியும். சாத்தியமான பிற தலைப்புகள் பின்வருமாறு: "கடுகடுப்பான பரிசுத்தவான்," "இல்லத்தில் தங்கியிருந்த பையன்," மற்றும் "தூரதேசம் இல்லத்திலேயே இருக்கும்போது." ஞாயிற்றுக்கிழமை காலையில் நீங்கள் "தூரதேசத்தில் தொலைந்து போகுதல்" (இளைய குமாரன்) பற்றிப் பிரசங்கித்து, மாலையில் அல்லது வாரத்தின் இடைநாள் ஊழியத்தில் "இல்லத்தில் தொலைந்து போகுதல்" (மூத்த குமாரன்) பற்றிப் பிரசங்கிக்க முடியும்.

குறிப்புகள்

*[1]சமூகவியலாளர்களின் கூற்றுப்படி, பிறப்பு வரிசை முறைமையானது பிள்ளைகளின் ஆளுமைத் தன்மையில் செயல்விளைவை ஏற்படுத்தக்கூடும். இதை நீங்கள் விரித்துரைக்க விரும்பலாம் அல்லது விரும்பாதிருக்கலாம். [2]இளைய அரைசகோதரர்களையும் அரை சகோதரிகளையும் கொண்டிருந்த இயேசு இதற்குக் குறிப்பிடத்தக்க விதிவிலக்காக இருக்கின்றார். [3]பின்தொடரும் பட்டியலானது ஆலோசனையாகத் தெரிவிக்கப்படும் விளக்கங்களைக் கொண்டுள்ளது, இவற்றில் சில ஓரளவுக்கு ஒத்ததாக இருக்கலாம். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மிகவும் நடைமுறைப்படக்கூடிய பாவங்களைப் பொறுக்கியெடுத்து, அவற்றை விரிவாக்கி, ஏற்புடைய வேதவசனங்களைக் கூட்டிக்கொள்ளுங்கள். இவை ஒவ்வொன்றையும் நீங்கள் பரிசேயர்களின் குறைபாடுகளுடன் விவரிக்க விரும்பலாம். [4]இது ஒருவேளை எனது கற்பனையாக மட்டும் இருக்கலாம், ஆனால் உலகத்தில் இதற்கு முன்பு இருந்தவர்களைக் காட்டிலும் அதிக கோபம் கொண்ட மக்கள் [இப்போது] இருப்பதாகக் காணப்படுகிறது. தலைப்புச் செய்திகள், கோபம் கொண்ட மக்களால் செய்யப்பட்ட குற்றங்கள் நிறைந்தவையாக உள்ளன. நீங்கள் கோபத்தின் வேர் பற்றி ஆய்வு செய்ய விரும்பலாம். [5]இது நான் வளர்ந்த இடத்தில் கூறப்படும் ஒரு பழங்கூற்றாகும். நீங்கள் வாழும் இடத்தில் இதே போன்ற கூற்று ஒன்றை நீங்கள் கொண்டிருக்கலாம். [''பீடை ஒழிந்தது!'' என்பது தமிழில் வழங்கப்படும் கூற்றுக்களில் ஒன்றாகும்.] [6]மீண்டுமாக, இவைகள் வசனம் 31 மற்றும் 32 பற்றி உங்கள் சிந்தனையைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆலோசனைகளாக மட்டுமே உள்ளன. உங்கள் சிந்தனைகளை விரிவாக்கி, ஏற்புடைய வேத வசனங்களைக் கூட்டிக் கொள்ளுங்கள். இரண்டு பிரதானக் கருத்துக்களின் கீழ் உள்ள பட்டியல்களையும் நீங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக்கலாம். [7]எல்லாப் பாவிகளுடனும் நாம் உறவுபட்டு இருக்கின்றோம்: தேவனுக்கு உண்மையற்ற பிள்ளைகளுடன் நாம், கிறிஸ்துவின் மூலமாக உறவுபட்டு இருக்கின் றோம்; விலகிப்போயுள்ள பாவிகளுடன் நாம், ஆதாமின் மூலமாக உறவுபட்டு இருக்கின்றோம். மற்றும், நாம் எல்லாரும் பொதுவான ஒரு பிதாவைக் கொண்டு இருக்கின்றோம்.*